# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

## வழக்கு எண்.15253/விசாரணை/2009

<u>விசாரணை நடைபெற்ற நாள் 24.09.2009.</u>

| | |
|---|---|
| முன்னிலை: | முனைவர் (திருமதி) சாரதா நம்பி ஆரூரன்,<br>எம்.ஏ.,எம்.ஃபில்,,பி.எச்,டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர்: | திரு R.ரவிச்சந்திரன்,<br>42/8, டவுண் ஹால் 2–வது தெரு,<br>சுவால்பேட்டை,<br>அரக்கோணம்,<br>வேலூர் மாவட்டம். |
| பொது அதிகார அமைப்பு: | பொதுத் தகவல் அலுவலர்,<br>காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்,<br>Crime Branch, CID,<br>வடக்கு சரகம்,<br>கிண்டி, சென்னை – 600 032. |

*****

மனுதாரா் திரு R.ரவிச்சந்திரன் மற்றும் வழக்கறிஞர் திரு S.சுப்பிரமணியன் பாலாஜி, மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு பரணிகுமார், காவல் துணைக் கண்காணிப்பாளர், Crime Branch, CID, வடக்கு சரகம், கிண்டி, சென்னை மற்றும் திரு உதயகுமார் இன்று (24.09.2009) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரா் 08.12.2008 அன்று பொதுத் தகவல் அலுவலர், Crime Branch, CID, வடக்கு சரகம், கிண்டி, சென்னை அவர்களிடம் சில தகவல்களைக் கேட்டு மனுச் செய்துள்ளார். 24.12.2008 அன்று குறிப்பிட்ட துறை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில்

விதி விலக்கு அளிக்கப்பட்ட துறை என்பதால் தகவல் தர மறுக்கப்பட்டுள்ளது. 08.12.2008 அன்று துறைக்கு மேல் முறையீடும், 01.07.2009 அன்று ஆணையத்திற்கு மேல் முறையீடும் செய்ததன் அடிப்படையில் வழக்கு இன்று (24.09.2009) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் பஞ்சாயத்து யூனியன், நெ.51, வடநெமிலி கிராமத்தில் சர்வே எண்.320/2 நிலம் குறித்துத் தகவல்களை மனுதாரர் கேட்டுள்ளார். இம்மனு தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுள்ளது. சி.பி.சி.ஐ.டி. போலீசார் வழக்குப் பதிவு செய்து, குற்றப் பத்திரிகையையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரிடம் இது குறித்து விசாரித்த போது இது குறித்து விசாரணை நடந்து கொண்டிருப்பதாகவும், தகவல்களைக் கொடுப்பது வழக்கின் போக்கினைப் பாதிக்கும் என்பதாலும் விதிப்படி விலக்களிக்கப்பட்ட துறை என்பதாலும் தகவல் தரவில்லை என்று கூறியதை ஆணையம் ஏற்கின்றது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 25.09.2009**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

**(சு.மோகன தாஸ்)**
**உதவி பதிவாளர்**

பெறுநர்

<u>**வழக்கு எண்.15253/விசாரணை/2009**</u>

பொதுத் தகவல் அலுவலர்,
காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்,
Crime Branch, CID,
வடக்கு சரகம்,
கிண்டி, சென்னை – 600 032.

திரு R.ரவிச்சந்திரன்,
42/8, டவுண் ஹால் 2–வது தெரு,
சுவால்பேட்டை,
அரக்கோணம்,
வேலூர் மாவட்டம்.

*"ptl"*